செய்தி வெளியீடு எண்: 193 நாள்: 18.03.2013

# மாவட்ட கலை விருதுக்கான தொகை ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/–ஆக உயர்த்தி வழங்குதல்

2002 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கலை பண்பாட்டுத்துறையின்கீழ், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களைத் தலைவர்களாகக் கொண்டு இயங்கி வரும் மாவட்டக் கலைமன்றங்களின் வாயிலாக வயதிற்கு ஏற்ற வகையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக கீழ்க்கண்ட விருதுகளை வழங்க ஆணையிட்டார்கள்.

| | | |
|---|---|---|
| 1) | 18 அகவையும் அதற்குட்பட்டோருக்கும் | **“கலை இளமணி”** |
| 2) | 19–35 அகவைப் பிரிவினர் | **“கலை வளர்மணி”** |
| 3) | 36–50 அகவைப் பிரிவினர் | **“கலை சுடர்மணி”** |
| 4) | 51–60 அகவைப் பிரிவினர் | **“கலை நன்மணி”** |
| 5) | 61 அகவைக்கும் அதற்கு மேற்பட்ட பிரிவினருக்கும் | **“கலை முதுமணி”** |

விருதுகளுக்குத் தெரிவு செய்யப்படும் கலை வித்தகர்களுக்கு ரூ.2000/–க்கு காசோலையும், ரூ.500/– செலவில் பாராட்டிதழ் மற்றும் பொன்னாடைகளும், ஆக மொத்தம் ஒருவருக்கு ரூ.2500/– என்ற வீதத்தில், ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு செய்து வந்தார்கள். இம்மாவட்ட விருதுகள் பல இடங்களில் வழங்கப்படாத நிலையை இத்துறை மாற்றி இளங்கலைஞர்களையும், முதுநிலை கலை வித்தகர்களையும் பாராட்டி ஊக்குவிக்கின்ற வகையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் நிலுவையில் இருந்த விருதுகளையெல்லாம் வழங்கி முடித்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாவட்ட ஆட்சியர்கள் தலைமையில் செயல்படும் மாவட்டக் கலைமன்றங்கள் மூலம் வழங்கப்படும் இந்த 5 விருதுகளுக்கானத் தொகையை ரூ.2000/– லிருந்து ரூ.5000/– ஆக உயத்தி ஒவ்வொரு விருதாளருக்கும் இந்த ஆண்டு முதல் (2012–2013) வழங்கிட அரசாணை(நிலை) எண்.50, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத்துறை, நாள். 15.3.2013 வாயிலாக ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதற்கென ரூ.8 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். மேலும், 30 மாவட்டங்களில் மட்டுமே செயல்பட்டு வந்த மாவட்டக் கலைமன்றங்களை புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருப்பூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களிலும் அமைத்து அந்த இரண்டு மாவட்டங்களிலும் வாழுகின்ற கலைஞர்களுக்கும் வயது வாரியாக விருது வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**